අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026**
**General Certificate of Education (Adv. Level) Supportive Assessment, 2026**

දෙමළ I
தமிழ் I
**Tamil I**

**72 T I**

*පැය තුනක්*
***மூன்று மணித்தியாலம்***
***Three hours***

අමතර කියවීමේ කාලය - මිනිත්තු 10යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
**Additional Reading Time - 10 minutes**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற்பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே

(i) இச் செய்யுளின் திணை, துறை என்பவற்றை விளக்குக.
(ii) பேகனின் கொடைச் சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
(iii) 'படைமடம் படான்' என்ற தொடரை விளக்குக.

(ஆ) கார் எனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்

(i) இச்செய்யுளில் இராமன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றான்?
(ii) இராமன் தங்கியிருந்த இடத்தைக் கண்ட பரதனின் துயரத்தை எடுத்துக் காட்டுக.
(iii) இச்செய்யுளில் இடம் பெறும் உருவக அணியை இனங்கண்டு விளக்குக.

(12+12=24 புள்ளிகள்)

**2.** (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே -அதன்
சீரித முாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ - உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ

சந்தமிகுந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே - தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல்.

தாமரைக் காடிது நித்தமுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார்.

புத்தம் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை - மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம் பிறக்குது நேரினிலே.

முல்லை குறிஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய்.

மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே.

(i) தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதியார் பெறும் சிறப்பிடம் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது?

(ii) பாரதியாரது பாடல்களின் இயல்புகள் விபரிக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(iii) இப்பாடலில் கையாளப்பட்ட உருவக அணிகள் பற்றி விளக்குக.

(iv) “மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டுகளாகி மயங்குதல் பார்”
இவ்வடிகளுக்கூடாக கவிஞர் உணர்த்தக் கருதிய விடயம் யாது? விடய விளக்கத்தில் நீர் காணும் நயத்தினை விளக்குக.

**அல்லது**

(ஆ) முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள், சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதர்களில் சேரவில்லையா? என் உம்மா, ஐந்து 'வக்து'ம் ஒழுங்காகத் தொழாவிட்டாலும் நோன்பு முப்பதும் பிடிப்பா, 'தறாவீஹ்' தொழப்போவா, ஹறாம் ஹலாலுக்குப் பயந்து நடப்பா. அவ வயத்துல பிறந்து ஸல்மா என்று பெயரும் வைத்துக்கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால்தானே இழிந்தவளானேன்! என் ஆசையின்படி உடுக்க முடியவில்லை! என் எண்ணத்தின்படி நடக்கமுடியவில்லை.

அடுத்த தெருவில் ஒரு நெசவு நிலையம் இருக்கின்றது. குமர்ப்பிள்ளைகள் எல்லாம் அங்கு போய்த் தொழில் பழகுதுகள். அதன் விருப்பம் போல உடுத்திக் கொண்டு சந்தோசமாக கதைத்துக் கொண்டு போகுதுகள். எனக்கு என்ன தொழில் தெரியும்? இந்த வீட்டுக்கு வந்து என்னத்தப் படிச்சுக் கொண்டேன்! ஸல்மாவின் சிந்தனை எதிர் நீச்சல் அடிக்கத் தொடங்கிற்று. அதனைத் திருப்பி எடுப்பது இனி இயலாத காரியம்.

மறுநாள் ஸல்மா அந்த வீட்டில் இருந்து விலகினாள். போடியார் பெண்சாதி சந்தோசமாக பதினைந்து ரூபாய் சம்பளத்தையும் கொடுத்தா. போடியார் அன்பளிப்பாக நூறு ரூபா கொடுத்தனுப்பினார். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் தன் தாய் வீட்டில் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு மன நிறைவான ஒரு வாழ்வு வாழ ஸல்மா மிக வேகமாக தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

பாய் களிசான், கௌன், மார்பகத்தில் தாவணி இத்தனையும் அணிந்து கொண்டு, எடுப்பான அழகுத் தோற்றத்தோடு கையில் குறிப்புக் கொப்பியுடன் நெசவு நிலையம் நோக்கி நடந்து செல்லும் புதுப்பிள்ளை வேறு யாரும் இல்லை! அந்த பதின்மூன்று வயது வேலைக்காரி ஸல்மாதான். அவள் இப்பொழுது நெசவு பழகுகிறாள். அவளது கம்பீரமான நடை, களங்கமற்ற நேர்ப் பார்வை என்பன அவளுடைய எதிர்கால வாழ்வின் வெற்றிக்கு நம்பிக்கையான ஆதாரங்களாக அமைந்தன.

(i) சமூகத்தை பற்றிய ஸல்மாவின் எண்ண ஓட்டத்தை விளக்குக.
(ii) தன்னைத் தானே நொந்துகொள்ளும் ஸல்மாவின் மனநிலை பற்றி விபரிக்குக.
(iii) ஸல்மா எடுத்த துணிகரமான செயல்கள் கதைக்கருவிற்கு வலுச்சேர்க்குமாற்றினை விளக்குக.
(iv) கதையின் முடிவிற்கூடாக கதாசிரியர் உணர்த்த முற்பட்ட விடயம் பற்றி கருத்துரைக்குக.

(4x4=16 புள்ளிகள்)

## பகுதி II

3. **திருக்குறள் பெரியாரைத் துணைக்கோடல்** எனும் அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதும்
(ஆ) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு
(இ) பெரியாரைத் துணைக்கோடலின் பயன்
(ஈ) பெரியாரைத் துணையாகக் கொள்ளாதவிடத்து ஏற்படும் குற்றம்
(உ) கையாளப்பட்டுள்ள உவமையின் சிறப்பு

(20 புள்ளிகள்)

4. கம்பராமாயணம் **குகப்படலத்தில்,** குகன் கங்கையின் தென் கரையில் தனது வீரர்களுக்கு கட்டளையிட்டது முதல் கங்கையின் வடகரையில் சுமந்திரன் குகனைப்பற்றி பரதனுக்கு கூறியது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பரதனைப் பற்றிய குகனது மனப்பதிவு
(ஆ) குகனது வஞ்சின உரைகள்
(இ) குகன், இராமன் மேல் வைத்த பேரன்பு
(ஈ) சுமந்திரன், குகனைப் பற்றி பரதனுக்குக் கூறியவை

(20 புள்ளிகள்)

5. ந. பிச்சமூர்த்தியின் **நெருக்கடி** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விபரிக்குக.

(அ) சரவணமுத்துவின் ஏழ்மை நிலை
(ஆ) பங்களாக்காரரின் நவீன அறிவியலின் வெளிப்பாடுகள்
(இ) சிறுகதை ஆசிரியர் கதையில் கையாண்ட உத்திமுறைகள்

(20 புள்ளிகள்)

6. முருகையனின் **இருதுயரங்கள்** என்ற நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை எடுத்துரைக்குக.

(அ) நிகழ்களங்கள் பற்றிய சித்திரிப்பு
(ஆ) மனோகரன், மனைவி பாமா மீது கொண்ட பாச வெளிப்பாடு
(இ) நாடகத்தின் மொழிநடை

(20 புள்ளிகள்)

7. **வீசாதீர்** என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) யாசகனின் அவலநிலை
(ஆ) யாசகன் மீது கவிஞர் கொண்ட இரக்கவுணர்வு
(இ) யாசகன் தொடர்பாக உதவுவோர் நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றிய கவிஞரின் எதிர்பார்ப்பு

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) தேம்பாவணி **காட்சிப்படலத்தில்** மரியாள், சூசை ஆகியோரின் சிறப்புகள்

(ஆ) **கோயிற் திருப்பதிகத்தில்** மணிவாசகர், இறைவன் தன்னை ஆட்கொண்ட விதத்தை வெளிப்படுத்துமாறு

(இ) **தொண்டு** கவிதையில் விலங்கு, பறவைகளின் நடத்தைகள்

(ஈ) சு. நடேசபிள்ளையின் **'இலங்கையாற்றுப்படை'** எனும் கட்டுரையில் இராமாயணம் தொடர்பாக மேல்நாட்டு அறிஞர்களது கருத்துக்கள்

(உ) கண்ணம்மா என் காதலி எனும் கவிதையில் பாரதியார், கண்ணம்மா மீது கொண்ட காதலுணர்வு

(20 புள்ளிகள்)

************

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Adv. Level) Supportive Assessment, 2026

දෙමළ II
தமிழ் II
Tamil II

**72 T II**

පැය තුනක්
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීමේ කාලය - මිනිත්තු 10යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி **I இல்** உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II இல்** உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- பகுதி **I இல்** முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றில் நடு உயிர்

1. இ  2. ஒ  3. உ  4. அ  5. ஆ  (…..)

1.2 நுனி அண்ண வெடிப்பொலியாக இடம்பெறும் சொல்

1. பற்று  2. அக்கா  3. பச்சை  4. தட்டு  5. பத்து  (…..)

1.3 ஏகாரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. வேள்வி  2. சேறு  3. கேடு  4. ஏழு  5. கேலி  (…..)

1.4 தேடிக்கொண்டிருந்தேன் என்பதன் பகுதி

1. தேடு  2. தேடிக்கொண்டு  3. தேடிக்கொண்டிரு  4. கொண்டிரு  5. தேடி  (…..)

1.5 பின்வருவனவற்றுள் இலக்கண விதிப்படி தவறாகப் புணர்ந்த சொல்

1. பலாவிலை  2. பனையோலை  3. கோயில்
4. பூவிதழ்  5. புகையிலை  (…..)

1.6 தொழிற்பெயர் இடம் பெற்றுள்ள வாக்கியம்

1. அனுமதி அட்டை நேற்றுக் கிடைத்தது
2. அங்கே வருவது தம்பியின் செல்லப்பிராணி
3. மாணவர்களது போக்கில் ஆசிரியருக்கு உடன்பாடில்லை
4. நேரத்தோடு சாப்பிடுவது எனது வழக்கம்.
5. அம்மா தயாரித்த பொங்கல் சுவையாக இருக்கும். (…..)

1.7 பின்வருவனவற்றுள் ஏனையவற்றிலிருந்து வேறுபடும் கூட்டுப் பெயர்

1. பாடசாலை 2. கூட்டுறவு 3. எறிகல் 4. சுடுகாடு
5. எழுதுகருவி (…..)

1.8 பின்வருவனவற்றில் காலங்காட்டாத தொழிற்பெயர்.

1. போனது 2. நடத்தல் 3. செய்யாமை 4. அழுதமை
5. வரைவது (…..)

1.9 'தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டுபிடித்தார்.' இதில் துணை வினையாக அமைவது.

1. காண் 2. கண்டு 3. பிடி 4. கண்டுபிடி
5. கண்டார் (…..)

1.10 எனக்கு ஆங்கிலம் பேசத் தெரியும். இவ்வாக்கியம் எவ்வகை எச்சத் தொடரை கொண்டுள்ளது.

1. செய்து 2. செய்ய 3. செய்யும் 4. செய்த
5. செய்தால் (…..)

1.11 கூட்டு வினையடையாக அமைவது

1. அமைதியாக 2. இனிமையான 3. கருணையுள்ள
4. முன்னால் 5. அடிக்கடி (…..)

1.12 தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையும் சொல்.

1. விடு 2. உண் 3. எரி 4. வாடு
5. ஓடு (…..)

1.13 **கள்** விகுதியுடனான புணர்ச்சியில் விகுதியின் முதல் எழுத்து இரட்டித்து வரும் சொல்.

1. ஆண்டு 2. மரம் 3. கல் 4. கால் 5. பூ (…..)

1.14 'எங்கேயோ மழை பெய்கிறது' என்பதில் ஓகார இடைச்சொல் உணர்த்தும் அதே பொருளை உணர்த்தி வரும் வாக்கியம்.

1. அப்பா பாடசாலைக்கோ போயிருக்கிறார்
2. வளைகுடா யுத்தத்தால் எத்தனையோ பேர் அல்லற்படுகின்றனர்
3. இந்தப் பாடலை எப்பவோ கேட்டிருக்கிறேன்.
4. சிவாவோ இந்த வேலையை செய்தது
5. அப்பாவோ, அம்மாவோ வர வேண்டும் (…..)

1.15 'அலைகடலெனத் திரண்ட மக்களால் நகரம் திக்குமுக்காடியது' என்பதில் இடம்பெற்றுள்ள 'திரண்ட மக்கள்' என்பது,

1. பெயர்த் தொடர் 2. பெயரடைத் தொடர் 3. வினைத் தொடர்
4. வினையடைத் தொடர் 5. வாக்கியத் தொடர் (…..)

1.16 எழுவாயற்ற வாக்கியம்

1. அறம் செய விரும்பு
2. தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பட்டது
3. சிறிது நேரத்தில் வந்துவிடுவேன்
4. புத்தகத்தை நேற்றிலிருந்து காணவில்லை
5. எவ்வளவு தூரம் போகவேண்டும்

(…..)

1.17 பின்வருவனவற்றுள் ‘அல்லது’ என்ற இணைப்பிடைச்சொல்லைப் பயன்படுத்தி இணைக்கமுடியாத வாக்கியங்கள்

1. அப்பா நாளைக்கு வருவார், அம்மா நாளைக்கு வருவார்
2. சூழலைப் பேணுவோம், நாம் துன்பப்படுவோம்
3. பேருந்து வரவில்லை, பரீட்சைக்குத் தாமதமாக வந்தேன்
4. இடியப்பம் சாப்பிடுங்கள், தோசை சாப்பிடுங்கள்
5. நாளைக்கு வரவேண்டும், மறுதினம் வாருங்கள்

(…..)

1.18 பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியமாக அமைவது.

1. புதிய கார் வாங்க நாங்கள் கொழும்புக்கு போனோம்.
2. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.
3. மாமா நல்ல வேலைக்கு செல்வார்.
4. நான் நல்ல சினிமாவைப் பார்ப்பேன்.
5. கோயிலுக்கு கும்பிடவா, பொழுதுபோக்கவா போனாய்.

(…..)

1.19 பின்வருவனவற்றுள் நிபந்தனை எச்சத் தொடராக அமைவது.

1. நாளை மழை வரக்கூடும்.
2. சரியான நேரத்திற்கு வந்தால்
3. தண்டனையில் இருந்து தப்பலாம்.
4. உறுப்பினர்கள் எல்லோரும் வந்தனர்.
5. என்று வானிலை அறிக்கை கூறுகின்றது.

(…..)

1.20 பின்வருவனவற்றுள் ஏழாம் வேற்றுமை இடம்பெற்றுள்ள வாக்கியம்

1. ஆங்கிலமொழியில் அறிவியல் நூல்கள் அதிகமாக உள்ளன.
2. வீட்டின் அறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
3. துன்பத்திலிருந்து வெளிவர வழி காண வேண்டும்.
4. கவிதையில் வியக்க வைப்பது கம்பன் கவிதை.
5. வகுப்பு மாணவர்களில் நாற்பதற்குப் பத்துபேர் ஒழுங்காக வருவதில்லை.

(…..)

(20 புள்ளிகள்)

************

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Adv. Level) Supportive Assessment, 2026

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி **I இல்** உள்ள **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்
- பகுதி **II இல்** எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

பூமியின் உயிர்ச்சூழல் சமநிலை என்பது இயற்கையின் அரிய கொடையாகும். காடுகள், ஆறுகள், சமுத்திரங்கள் மற்றும் வளிமண்டலம் என அனைத்தும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஒரு சங்கிலித்தொடர் போன்றது. ஆனால், தற்கால மனிதனின் மிதமிஞ்சிய நுகர்வுக் கலாசாரமும், கட்டுப்பாடற்ற கைத்தொழில் மயமாக்கலும் இச்சமநிலையைத் தலைகீழாக மாற்றியுள்ளன. குறிப்பாக, காடழிப்பு மற்றும் உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பயன்பாடு காரணமாக வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் அளவு அதிகரித்து, புவி வெப்பமடைதல் எனும் பாரிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளது. இது துருவப் பனிப்பாறைகள் உருகுவதற்கும், கடல் மட்டம் உயர்வதற்கும் வழிவகுப்பதுடன், பருவகால மாற்றங்களையும் சீர்குலைத்துள்ளது. பல அரிய வகை உயிரினங்கள் தமது வாழிடங்களை இழந்து அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளன.

சூழல் பாதுகாப்பு என்பது ஒரு தனிநபர் சார்ந்த விவகாரமன்றி, உலகளாவிய கடப்பாடாகும். பிளாஸ்டிக் கழிவுகளின் பெருக்கம் சமுத்திர உயிர்வாழ்வினங்களுக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது. மாற்று எரிசக்தி மூலங்களான சூரிய சக்தி மற்றும் காற்றுச் சக்தி ஆகியவற்றின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலமே நாம் எதிர்காலச் சந்ததியினருக்கு வாழ்வதற்குத் தகுதியான ஒரு பூமியை விட்டுச் செல்ல முடியும்.

பூமி நமக்குச்சொந்தமில்லை. நாம்தான் பூமிக்குச் சொந்தமானவர்கள் என்னும் அறிஞர் கூற்றிற்கிணங்க இப்பூமியிலே அவதரித்த நாம் இயற்கை வளங்களைச் சுரண்டுவதை விடுத்து, அவற்றை மீளுருவாக்கம் செய்யத்தலைப்படவேண்டும். அத்துடன், பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி உலகம் நகர வேண்டும். மரங்களை நடுவதும், நீர்நிலைகளைப் பாதுகாப்பதும் ஒவ்வொரு பிரஜையினதும் தலையாய கடமைகளாகும். நாம் இயற்கையை நேசித்துப் பாதுகாத்தால் மட்டுமே, இயற்கை நம்மைத் தொடர்ந்து பாதுகாக்கும் என்பதை உணர வேண்டிய தருணம் இதுவாகும்.

(13 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் வாசிப்பு என்பது வெறும் காகிதங்களோடு முடிந்துவிடும் ஒரு சடங்கல்ல. ஒரு காலத்தில் நூலகத்தின் நிசப்தத்தில் அமர்ந்து புத்தகத்தின் மணத்தை நுகர்ந்து கொண்டே வாசிப்பதில் இருந்த சுகம் தனித்துவமானது. ஆனால், இன்று திரைகளின் (Screens) வழியே தகவல்கள் நம்மை வந்தடைகின்றன. இந்த மாற்றத்தை வெறும் தொழில்நுட்ப வளர்ச்சியாக மட்டும் பார்க்க முடியாது. இது மனித மூளையின் தகவல்களை உள்வாங்கும் முறையிலேயே மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆழமான வாசிப்பு (Deep Reading) என்பது ஒரு கலையாகும். ஒரு நாவலை வாசிக்கும்போது அதன் பாத்திரங்களோடு நாம் பயணிப்பதும், அவர்கள் அனுபவிக்கும் துயரங்களையும் மகிழ்ச்சிகளையும் நாமும் உணர்வதும் ஒரு விதமான பச்சாதாபத்தை (Empathy) நமக்குள் உருவாக்குகிறது. ஆனால், சமூக வலைத்தளங்களின் வருகைக்குப் பின், நமது வாசிப்பு என்பது “மேலோட்டமான வருடல்“ (Skimming) என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தகவல்கள் மிகையாகக் கொட்டிக்கிடக்கும் இக்காலத்தில், எதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை விட எதை விடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதே அறிவுத்திறனாகக் கருதப்படுகிறது. எனவே, மாணவர்கள் வெறும் பரீட்சை நோக்கத்திற்காக மட்டும் வாசிக்காமல், உலகைப் புரிந்துகொள்ளும் ஒரு சன்னலாக வாசிப்பைப் பயன்படுத்த வேண்டும். ஒரு நல்ல கட்டுரை என்பது வாசகனைச் சிந்திக்கத் தூண்டுவதுடன், அவன் அதுவரை கொண்டிருந்த நம்பிக்கைகளை மறுபரிசீலனை செய்ய வைப்பதாக அமைய வேண்டும்.

1. இன்றைய டிஜிட்டல் யுகத்தில் வாசிப்பு முறையில் ஏற்பட்டுள்ள பிரதான மாற்றம் என்ன?
2. “ஆழமான வாசிப்பு” (Deep Reading) என்பது எதனை உருவாக்குகிறது என கட்டுரையாளர் கருதுகிறார்?
3. சமூக வலைத்தளங்கள் வாசிப்புப் பழக்கத்தை எவ்வாறு மாற்றியுள்ளன?
4. தகவல் மிகைப்பு உள்ள காலத்தில் அறிவுத்திறன் என்பது எதனைத் தீர்மானிப்பதாக அமைகிறது?
5. ஒரு சிறந்த கட்டுரை வாசகனிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்?
6. மாணவர்கள், வாசிப்பை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என உரைப்பகுதி அறிவுறுத்துகிறது?

(12 புள்ளிகள்)
(13 + 12 = 25 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பினைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

1. சமகால உலகப் போர்களும் சர்வதேச அமைதியும்
2. போதைப்பொருள் ஒழிப்பில் இளைய சமுதாயத்தின் பங்கு
3. சுற்றுலாத்துறையும் இலங்கையின் பொருளாதார மீட்சியும்
4. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் தமிழ்ப் பணிகள்
5. “கெடுவார் கேடு நினைப்பார்”

(25 புள்ளிகள்)

## பகுதி II

4. (அ) பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இலக்கியங்களைக் குறிப்பிடுக.
(ஆ) பல்லவர்கால இலக்கியங்களின் முக்கியமான பண்புகளை விளக்குக.
(இ) பல்லவர் கால பக்தி இலக்கியங்களின் தோற்றத்திற்கு சங்க இலக்கியங்கள் ஏதுவாய் அமையுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**5.** (அ) விஜய நகர நாயக்கர் காலப் பொதுமக்கள்சார் இலக்கியங்களை வகைப்படுத்துக.
(ஆ) இக்காலத்தில் பெருமளவு சிற்றிலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்களை ஆராய்க.
(இ) நாயக்கர் கால இலக்கியத்தில் குமரகுருபரரின் கவியாற்றல் குறித்து கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

**6.** (அ) போர்த்துக்கேயர் கால இலக்கியங்களை குறிப்பிட்டு விளக்குக.
(ஆ) ஒல்லாந்தர் கால தமிழ் இலக்கியப் போக்கு பற்றி ஆராய்க.
(இ) ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் வரத பண்டிதரின் பங்களிப்பினை தெளிவுறுத்துக.

(15 ள்ளிகள்)

**7.** பின்வருவோரில் யாரேனும் **இருவர்** ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(அ) யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவர்
(ஆ) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
(இ) மங்களநாயகம் தம்பையா
(ஈ) செங்கையாழியான்
(உ) செ.கதிர்காமநாதன்

(15 ள்ளிகள்)

**8.** (அ) (i) 'நனை' என்ற வினையடியைப் பயன்படுத்தி தன்வினை, பிறவினை வாக்கியங்கள் ஒவ்வொன்று தருக.

(ii) 'தான்' என்பது தற்சுட்டுப் பெயராகவும், அழுத்தப் பொருள்தரும் இடைச்சொல்லாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

(iii) பரி, பறி ஆகிய சொற்கள் பெயராக வருமாறு தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

(iv) 'கொள்' என்பது முதல் வினையாகவும் துணைவினையாகவும் அமையுமாறு தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.

(v) 'பத்திரிகைச் செய்திகளில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களையே தரப்படவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்' என்ற வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) தொழிற்பெயர்
(ii) ஏவல் வினைமுற்று – வியங்கோள் வினைமுற்று
(iii) செயப்படுபொருள் குன்றா வாக்கியம் - செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்

(05 புள்ளிகள்)
(10 + 5 = 15 புள்ளிகள்)

************